## 11.8 2000–2001–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியை பகிர்ந்தளிப்பதற்கான வழி முறைகள்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 154 நாள் : 21.06.2000

படிக்க :

1. அரசாணை(நிலை) எண். 151, ஊரக வளர்ச்சித் துறை நாள்–22.07.1999
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.36044/2000/ஊ.அ.(ம) நி1, நாள்–22.05.2000

**ஆணை**

2000– 01 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.93.2777 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் தனது கடிதத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநர் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான முன்மொழிவுகள் அனுப்பியுள்ளார்.

3.ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களை அரசு பரிசீலித்து சமன்பாடு மற்றும் ஊக்க நிதியான ரூ.93.2777 கோடியை கீழ்க்கண்டவாறு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடுகிறது.

| நிதி தலைப்புகள் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. சமன்பாட்டு நிதி | (ரூ. கோடியில்) | | |
| 1.1. குடிநீர்<br>வருவாய் குறைவான நலிந்த ஊராட்சிகள் குடிநீர் கட்டணத் தொகையை செலுத்த வழிவகை செய்ய மாவட்டத்திற்கு தலா ரூ.12.50 இலட்சம் வீதம் (ரூ.12.50 x 28) | 3.50 | – | 3.50 |
| 1.2. மின் கட்டணம்<br>வருவாய் குறைவான நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டண தொகையை செலுத்துவதற்கு வழிவகை செய்ய மாவட்டத்திற்கு தலா ரூ.12.50 இலட்சம் வீதம் (ரூ.12.50 x 28) | 3.50 | – | 3.50 |
| 1.3. அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற பணிகள்.<br>(அ) ஊராட்சிகளிடையே உள்கட்டமைப்பு வசதிகளில் சமன்பாடு ஏற்படுத்தவும், நலிவுற்ற ஊராட்சிகள் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஊராட்சிகள் முக்கிய நகரங்களை ஒட்டிய ஊராட்சிகள் இயற்கை சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள கடலோர மற்றும் மலைப்பகுதி ஊராட்சிகளில் போதிய அடிப்படை வசதிகள், குடிநீர், தெருக்கள் மேம்பாடு, வடிகால் வசதி, சந்தைகள் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்த ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமன்பாட்டு நிதி உதவி | 7.15 | 8.00 | 15.15 |
| (ஆ) 10000 புதிய தெரு விளக்குகள் அமைத்தல், 2000 குழல் விளக்குகளை சோடியம் விளக்குகளாக மேம்பாடு செய்தல் | 12.00 | – | 12.00 |

| | | | |
|---|---|---|---|
| **1.4.** வருவாய் குறைவான ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வாக செலவை மேற்கொள்ள இயலாத நிதி இடைவெளியை ஈடு செய்ய நிதியுதவி 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் | – | 2.00 | 2.00 |
| **1.5.** பழுதடைந்துள்ள 84 சமையல் அறைக் கட்டிடங்கள், 1529 சத்துணவு மையம் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட மைய கட்டிடங்களை பழுது பார்த்தல் | – | 3.66 | 3.66 |
| **1.6.** நிதி வசதி மற்றும் அடிப்படை வசதிகளில் நலிவுற்றுள்ள ஊராட்சிகளில் உள்ள தெருக்களை தூய்மையாக வைத்து இருக்கவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும், சிமெண்ட் காங்கிரீட் தெருக்கள் அமைக்க மத்திய நிதிக்குழு மானிய நிதியுடன் ஈட்டு மானியமாக வழங்க | 10.00 | – | 10.00 |
| **1.7.** குடிநீர் வழங்கல் மற்றும் பணி பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களின் கைபம்பு பொருத்துநர்கள் மற்றும் பொருத்துநர்களை கொண்டு சுழல் நிதி ஏற்படுத்தி தொழில் நுட்ப சேவைக் குழு அமைத்தல் | 2.85 | – | 2.85 |
| **2.** ஊக்க நிதி<br>**2.1.** 100 விழுக்காடு வீட்டு வரி வசூல் செய்யும் ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வசூலுக்கு 3 ரூபாயும் 80 விழுக்காட்டிற்கு மேல் வீட்டு வரி வசூல் இருந்தால் 2 ரூபாயும் 80 விழுக்காட்டிற்கு குறைவாக வீட்டு வரி வசூல் இருந்தால் ஒரு ரூபாய் வரி வசூலுக்கு ஒரு ரூபாயும் ஊக்க நிதியாக வழங்குதல் | 37.9177 | – | 37.9177 |
| **2.2.** புதியதாக சமத்துவ மயானம் அமைக்கும் ஊராட்சிகளுக்கு தலா ரூ.1.50 இலட்சம் ஊக்க நிதி வழங்குதல் (1.50 x 1.80) | 2.70 | – | 2.70 |
| **மொத்தம்** | **79.6177** | **13.66** | **93.2777** |

மேலே கூறப்பட்டுள்ள இனம் 1.1 மற்றும் 1.2 ல் கண்டுள்ள தொகைகளை ஊரக வளர்ச்சி இயக்குநர் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் மற்றும் மின்கட்டணம் செலுத்தவும் 1.3(அ) மற்றும் (ஆ) வில் கண்டுள்ள தொகையினை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் அடிப்படை வசதிகளை செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து முன்மொழிவுகளை பெற்று நிதி ஒதுக்கீடு செய்யவும், இனம் 1.4 மற்றும் 1.5 ல் உள்ள தொகையினை பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கவும், இனம் 1.6 ல் கண்டுள்ள தொகையை மாவட்ட ஆட்சியர்களிடம் முன்மொழிவுகள் பெற்று மத்திய நிதிகுழு மானிய உதவியுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஊராட்சிகளுக்கு வழங்கவும், இனம் 2.1 ல் உள்ள ஊக்க நிதியினை 1999 – 2000 ஆம் ஆண்டு ஊராட்சிகளில் வீட்டு வரியாக 100 சதவீதம் வரி வசூல் செய்த ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வரி வசூலுக்கு மூன்று ரூபாயும், 80 சதவீதத்திற்கு மேல் வரி வசூல் செய்த ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வரி வசூலுக்கு இரண்டு ரூபாயும், 80 சதவீதத்திற்கு குறைவாக வரி வசூல் செய்த ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வரி வசூலுக்கு ஒரு ரூபாயும், ஊக்க நிதியாக ஊராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து வரும் முன்மொழிவுகள் அடிப்படையில் வழங்கவும், இனம் 2.2 ல் உள்ள தொகையை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெற்று வழங்கவும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4(i). கிராம ஊராட்சி பணியமைப்பை சீர் அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநர் தலைமையில்

ஏற்படுத்தப்பட்ட குழுவின் பரிந்துரைகளில் ஒன்றான கைப்பம்பு பொருத்துனர், அவரைச் சார்ந்த உதவியாளர்கள், விசைப்பம்பு பராமரிப்பதற்கு உதவி புரியும் மின் பணியாளர்களை உள்ளடக்கி தொழிற் நுட்ப சேவைக் குழு ஊராட்சி அரசு ஏற்கிறது. இதை செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சுழல் நிதி ஒன்றை ஏற்படுத்துவதற்கும் அரசு ஆணையிடுகிறது. இதற்கென முதற்கட்டமாக அரசு 2000–2001–ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட குடிநீர் மானியத்திலிருந்து ரூ.1.00 கோடி (ஒரு கோடியை) பயன்படுத்திக் கொள்ள அரசாணை (நிலை) எண். 121, ஊரக வளர்ச்சித் (தி3) துறை, நாள் 10.05.2000 த்தில் ஆணையிடப்பட்டுள்ளது.

(ii) சமன்பாடு மற்றும் ஊக்க நிதியிலிருந்து முன்பத்தி 4 (i) ல் குறிப்பிட்டுள்ளதற்காக ரூ.2.85 கோடி (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தைந்து இலட்சம்) ஒதுக்கி அரசு ஆணையிடுகிறது.

(iii) முன் பத்திகள் 4 (i) மற்றும் 4 (ii) ல் குறிப்பிட்டுள்ளவற்றிற்காக ஒதுக்கப்படும் நிதியான ரூ.3.85 கோடியில் (மூன்று கோடியே எண்பத்தைந்து இலட்சம்) ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.1.00 இலட்சம் (ஒரு இலட்சம்) வீதம் வழங்குவதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அதிகாரம் அளித்து ஆணையிடுகிறது. இதனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து இனி ரூ.1.00 கோடியை வழங்குவது நிறுத்தப்படும்.

5. மேலே பத்தி 3 ல் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியினை பெற்று நான்கு காலாண்டு தவணைகளில் விடுவிக்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. முன்பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினமான ரூ.93.2777 கோடியை (தொண்ணூற்று மூன்று கோடியே இருபத்தேழு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“3604.00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்– 200. ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – 1 திட்டத்தில் சேராதது – BB – மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம்–02. மூலதனச் செலவிற்கு மான்யங்கள் (து.தொ.கு.எண். 3604–00–200–0927)

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.44005/ஊரக வளர்ச்சித் துறை/2000, நாள் 20.06.2000 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்